218—

பேருந்து வசதி

வினா எண் 1442—திரு. ஜே.சி.டி. பிரபாகர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஐசிஎப். பேருந்து நிலையத்திலிருந்து செங்குன்றம் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஐ.சி.எப்.-லிருந்து பெசன்ட் நகர் / திருவான்மியூருக்கு வழித்தடம் எண் 47A-இல் 21 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும், ஐசிஎப். வழியாக இயக்கப்படும் பேருந்துகளை பயன்படுத்தி விக்ஸ் இந்தியா பேருந்து நிறுத்தம் சென்றடைந்து செங்குன்றம் மார்க்கம் செல்ல அதிகளவில் மொத்தம் 48 பேருந்துகள் உள்ளன. விக்ஸ் இந்தியா பேருந்து நிறுத்தத்திலிருந்து செங்குன்றம் மார்க்கம் செல்ல மொத்தம் 35 நடைப் பேருந்துகள் உள்ளன. எனினும், சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையினையேற்று அயனாவரத்திலிருந்து ஐசிஎப் வழியாக செங்குன்றத்திற்கு பேருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

219—

பேருந்து வசதி

வினா எண் 1454—திரு. சு. ரவி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, திருத்தணி முதல் மேல்களத்தூர், செல்வமந்தை வழியாக நெமிலி வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 மே 16]

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்தணி முதல் பேள்ளைத்தூர், செவ்வைமந்தை வழியாக நெமிலி தட தூரம் 31 கி.மீ. ஆகும். இத்தடத்தில் திருத்தணி முதல் குருவராஜுபேட்டை வழியாக அத்திமாஞ்சேரிப்பேட்டை வரை 22 கி.மீ. தடப்பகுதியில் திருத்தணி பணிமனையிலிருந்து 2 நகரப் பேருந்துகள்மூலம் தினசரி 30 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும், கேட்கப்பட்டுள்ள வழித்தடத்தில் தனியார் பேருந்துமூலம் தினசரி 6 நடைகள் இயக்கப்படுகின்றன. எனினும் குறிப்பிட்டு கோரிக்கைப் பெறப்பட்டவுடன், புதிய பேருந்துகள் இயக்கப்படும்போது கோரியுள்ள தடத்தில் பேருந்து இயக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

220—

பேருந்து வசதி

வினா எண் 1455—திரு. சு. ரவி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் முதல் பளப்பாக்கம், தக்கோலம் கூட் ரோடு, ஆட்டுப்பாக்கம், கீழ்வெங்கடாபுரம் வழியாக நெமிலி வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் முதல் பளப்பாக்கம் வழி தக்கோலம், கூட்டுச் சாலை, ஆட்டுப்பாக்கம், கீழ்வெங்கடாபுரம் தடத்தின் தூரம் 260 கி.மீ. ஆகும். தற்பொழுது அரக்கோணம் முதல் நெமிலி வரை காஞ்சிபுரம் பணிமனை நகரத் தடம் டி.89 மூலம் தினசரி 7 நடைகள் இயக்கப்படுகின்றன. நெமிலி முதல் பளப்பாக்கம் வரையிலான தடத்தில் நகர மற்றும் புறநகர்த் தடங்கள்மூலம் பேருந்து வசதி உள்ளது.